# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ
# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 12,124 — 1960 මැයි 4 වැනි බදාදා — 4.5.1960

12,124 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு மே மாதம் 4 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இல. என். ஈ. 61.

அரிசி (மொத்த விற்பனையும் சில்லறை விற்பனையும்.)

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவோடு 3 (2) ம் பிரிவால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு நுவரேலியா மாவட்டத்தின் உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), சில்வெஸ்டர் ஜெஸ்டின் விஜேசேகர ஆகிய யான் இக்கட்டளையால்—

(1) 24.6.59 ல் வெளிவந்த 11,782 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமான பத்திரிகையில், 15.6.59 ம் திகதியிட்டுப் பிரசுரமான என். ஈ. 49 இலக்கத்தைக் கொண்ட அரிசியின் விலைகளை நிர்ணயிக்கும் உணவு விலைக் கட்டளையை இத் திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் ;

(2) இதன்கீழ்த் தரப்படும் 1 ம் அட்டவணையின் 2 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளை முறையே நிகர அந்தர் ரொன்றை மொத்த வியாபாரி ஒருவர் சில்லறை வியாபாரி ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாக உடனடியாக நடை முறையில் வருமாறு விதிக்கிறேன். இவ்விலைகளுக்குக் கூடுதலாக அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப் பட்டுள்ள எல்லைகளுக்குள் அரிசியை விற்கலாகாது ;

(3) இதன் கீழ்த் தரப்படும் 2 ம் அட்டவணையின் 2 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளை முறையே நிகர இருத்தல் இரண்டைச் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலைகளாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். இவ்விலைகளுக்கு கூடுதலாக அவ்வட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எல்லைகளுக்குள் அரிசியை விற்கலாகாது ;

(4) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) எந்த அரிசியினதோ எவ்வித விற்பனையும் திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது ஒரே நேரத்தில் நிகர அந்தர்த் தொகையில் அல்லது அதற்குக் கூடுதலாகவோ விற்றல் மொத்த விற்பனையாகக் கருதப்படுமென்றும் ;

(ஆ) எந்த அளவு அரிசியினதோ எவ்வித விற்பனையும் ஒரே நேரத்தில் நிகர அந்தருக்குக் குறைவாகப் பாவனைக்கோ உட்கொள்ளுதற்கோ விற்றல் சில்லறை விற்பனையாகக் கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(5) பங்கீட்டரிசியை வேறொரு பொருளுடன் கலந்து எவராவது ஆகக் கூடிய விலை நியமிக்கப்பட்டுள்ள இடங்களில் விற்கப்படாதென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(6) பங்கீட்டரிசியை விற்குமிடத்து அவ்வட்டவணைகளில் 2 ம் பத்திகளில் குறிப்பிட்ட ஆகக் கூடிய விலைகள் அவற்றைக் கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(7) இக்கட்டளையின் நோக்கத்துக்காக, " இருத்தல் " அல்லது " இரு " என்பது " அவோர்டுபோஸ் " எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(8) பங்கீட்டரிசியை தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலோ அல்லது எவ்வாகனத்திலோ வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், அவ்விடத்தில் அரிசி அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் அரிசியின் தொகை, இக் கட்டளையால் நிர்ணயிக்கப்பட்ட ஆகக் கூடிய விலைகள், ஒரு அங்குலத்திற்குக் குறையாத உயரத்தைக் கொண்ட எண்களில் விலைக்குறிப்பு அட்டைகளில் அல்லது விளம்பரப்பலகைகளில் எழுதப்பெற்று பாவனையாளர் ஒவ்வொருவருக்கும் அரிசியின் ஆகக்கூடிய விலைகளும் தெரியக்கூடியதாக அக்கொள்கலத்தில் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(9) பங்கீட்டரிசியை மொத்த விலையாகவோ அல்லது சில்லறை விலையாகவோ விற்கும் ஒவ்வொரு வியாபாரியும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்கப்பட்ட அரிசியின் தொகை (நிறையில்) ;

(இ) விற்கப்பட்ட பங்கீட்டரிசியின் விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

1960 ம் ஆண்டு மே மாதம் 2 ந் திகதி 9 மணிக்கு நுவரேலியா கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

எஸ். ஜே. விஜேசேகர,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
நுவரேலியா.

முதலாம் அட்டவணை

| பத்தி 1<br>எல்லைகள் | | | பத்தி 2<br>மொத்த வியாபாரியின் நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| நுவரேலியா 4 வட்டாரம் | | | |
| நுவரஎலியா | .. | .. | 14 58 |
| கந்தபொலை | .. | .. | 14 79 |
| நானுஓயா | .. | .. | 14 34 |
| ஹக்கல | .. | .. | 14 79 |
| வலப்பனே பிரிவு அதிகாரி பகுதி | | | |
| ராகலை | .. | .. | 14 68 |
| உடபுஸ்சல்லாவ | .. | .. | 15 06 |
| வத்துமுல்ல | .. | .. | 15 69 |
| நெல்தண்டா ஹீன்ன | .. | .. | 16 04 |

| பத்தி 1 எல்லைகள் | | | பத்தி 2 மொத்த வியாபாரியின் நிகர அந்தர் ஹன்றின் ஆகக்கூடிய மொத்த விலை ரூ. ச. |
|---|---|---|---|
| கொத்தமலே பிரிவு அதிகாரி பகுதி | | | |
| ஆகரபத்தன | .. | .. | 14 52 |
| தலவாகொல்லை | .. | .. | 14 21 |
| கொடகல .. | .. | .. | 14 21 |
| வட்டகொடை | .. | .. | 14 38 |
| பூண்டுலோயா | .. | .. | 14 66 |
| சங்கிலிபாலம் | .. | .. | 14 99 |
| மல்லந்த .. | .. | .. | 14 81 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக இப்பொருள்களை விற்கலாகாது.

## இரண்டாம் அட்டவணை

| பத்தி 1 எல்லைகள் | | | பத்தி 2 சில்லறை வியாபாரியின் நிகர இருத்தல் இரண்டின் ஆகக்கூடிய சில்லறை விலை ரூ. ச. |
|---|---|---|---|
| நுவரெலியா 4 வட்டாரம் | | | |
| நுவரெலியா | .. | .. | 0 27½ |
| கந்தப்பொலை | .. | .. | 0 27½ |
| நானுஓயா .. | .. | .. | 0 27 |
| பிலக்பூல் .. | .. | .. | 0 27 |
| ரதல்லை | .. | .. | 0 27 |
| ஹக்கலை .. | .. | .. | 0 27½ |
| கட்டுமான .. | .. | .. | 0 27½ |
| அம்பவெல | .. | .. | 0 28 |
| வலபனே பிரிவு அதிகாரி பகுதி ஓயபலாத கோரலை | | | |
| வத்துமுல்ல | .. | .. | 0 29 |
| படகொல்ல .. | .. | .. | 0 29½ |
| கும்பல்கமுவ | .. | .. | 0 29½ |
| மில்லபிட்டிய | .. | .. | 0 29½ |
| கெட்டகந்துர | .. | .. | 0 30 |
| திப்பொடுகொட | .. | .. | 0 30 |
| பன்னல (டப்ளியு. டி. சில்வா) | | .. | 0 30 |
| பன்னல (மற்றும் வியாபாரிகள்) | | .. | 0 30½ |
| மெதபலாத கோரலை | | | |
| களகன்வத்த | .. | .. | 0 31 |
| கள்கெட்டிவெல | .. | .. | 0 31 |
| உடமாதுர .. | .. | .. | 0 31 |
| அருக்வத்த .. | .. | .. | 0 31½ |
| பொலகந்தவெல | .. | | 0 31½ |
| இலுக்தென்ன (கிரிபண்டா) .. | | .. | 0 31½ |
| இலுக்தென்ன (எம். டப்ளியு. கிரிபண்டா) | | .. | 0 32 |
| யட்டபலாத கோரலை | | | |
| நெல்தண்டா ஹின்ன | .. | .. | 0 30 |
| தெனம்புரே.. | .. | .. | 0 30 |
| ஹரஸ்பத்த | .. | .. | 0 28 |
| கும்புக்வெல | .. | .. | 0 29 |
| அம்பன்நெல்ல | .. | .. | 0 31 |
| மடுல்ல .. | .. | .. | 0 30 |
| உடபலாத கோரலை | | | |
| ராகலை .. | .. | .. | 0 27½ |
| சென்ட் லெனுண்ஸ் | .. | .. | 0 27½ |
| சென்ட் மாகிரட்ஸ் (எல்லா வியாபாரிகளும்) எஸ். பி. பேபி சிங்கோவை விட) | | .. | 0 28 |
| புருக்சயிட் .. | .. | .. | 0 28½ |
| சென்ட் மாகரட்ஸ் (எல். பி. பேபிசிங்கோ) | | .. | 0 28½ |
| சூரியகாபத்தன | .. | .. | 0 28½ |
| அம்பலியத்த (டப்ளியு. எம். பி. பண்டா) | | .. | 0 29 |

| பத்தி 1 எல்லைகள் | | | பத்தி 2 சில்லறை வியாபாரியின் நிகர இருத்தல் இரண்டின் ஆகக்கூடிய சில்லறை விலை ரூ. ச. |
|---|---|---|---|
| ருபாஹ (எம். டப்ளியு. எம். பியசேன) | | .. | 0 29 |
| ருபாஹ (மற்றும் வியாபாரிகள்) | | .. | 0 29½ |
| குருபனுவெல | .. | .. | 0 29½ |
| அம்பலியத்த | .. | .. | 0 29½ |
| மாலியத்த .. | .. | .. | 0 30 |
| கொத்மலே பிரிவு அதிகாரி பகுதி—மெதபனே உடபனே கோரலை | | | |
| பூண்டுலுஓயா | .. | .. | 0 27½ |
| கும்பல்ஒலுவ | .. | .. | 0 27½ |
| துனுகேதெனிய | .. | .. | 0 27½ |
| மெத்தகும்புர | .. | .. | 0 28½ |
| ஹால்பொல | .. | .. | 0 28 |
| மெத்தகம .. | .. | .. | 0 29½ |
| கொத்துனுகொட | .. | .. | 0 28 |
| கலபிட்டிய .. | .. | .. | 0 29 |
| ஹேதுனுவாவ | .. | .. | 0 28 |
| உடகம .. | .. | .. | 0 28 |
| ராவனுகொட | .. | .. | 0 28½ |
| விஜேபாகுகந்த | ... | .. | 0 28 |
| வட்டகொட .. | .. | .. | 0 27 |
| டிம்புல்ல கோரலை | | | |
| தல்வாக்கொல்லை | .. | .. | 0 26½ |
| டிலிகுல்ரி .. | .. | .. | 0 27 |
| வலஹா .. | .. | .. | 0 27 |
| விந்துல்ல .. | .. | .. | 0 27 |
| சென்ட் கூம்ஸ் | .. | .. | 0 27 |
| இல்டன் ஹேல் | .. | .. | 0 27 |
| பெல்கிரேவியா | .. | .. | 0 27 |
| ஹொல்புருக் | .. | .. | 0 27 |
| ஆகரபத்தன | .. | .. | 0 27 |
| கிலென்லியன் | .. | .. | 0 27 |
| மராயா .. | .. | .. | 0 27½ |
| டயகம .. | .. | .. | 0 27½ |
| கொடகல .. | .. | .. | 0 26½ |
| ரொகிடா .. | .. | .. | 0 27½ |
| பதன (கொடகல) | .. | .. | 0 27 |
| போகாவத்த | .. | .. | 0 27 |
| பல்லேபனே கோரலை | | | |
| மொறபே .. | .. | .. | 0 27 |
| கடதொர .. | .. | .. | 0 27 |
| மாஸ்வெல .. | .. | .. | 0 27½ |
| கொடகேபிட்டிய | .. | .. | 0 28 |
| மாவெல .. | .. | .. | 0 27½ |
| திஸ்பனே கோரலை | | | |
| வடத்தர .. | .. | .. | 0 28 |
| நவன்கம .. | .. | .. | 0 27½ |
| ஹான்கல (டி. எம். புன்சிரால) | | .. | 0 27½ |
| ஹான்கல (மற்றும் வியாபாரிகள்) | | .. | 0 28 |
| தொருவாதெனிய | .. | .. | 0 26½ |
| ரொஜசன்கம | .. | .. | 0 27 |
| திஸ்பனே (கே. பி. எஸ். கருணாரத்ன) | | .. | 0 27 |
| ஹபுகஸ்தலாவை | .. | .. | 0 27 |
| திஸ்பனே கந்த | | .. | 0 27 |
| திஸ்பனே (மற்றும் வியாபாரிகள்) | | .. | 0 27 |
| ரம்படை கோரலை—நியன்கன்தொர | | | |
| சங்கிலிபாலம் | .. | .. | 0 28 |
| அம்பதலாவ | .. | .. | 0 28 |
| நியன்கன்தொர | .. | .. | 0 28 |
| கரகஸ்தலாவ | .. | .. | 0 28½ |
| பனம்கம்மன | .. | .. | 0 28½ |
| ரம்படைகம | .. | .. | 0 28½ |
| ரம்படை டவுன் | .. | .. | 0 29 |
| குடாஓயா .. | .. | .. | 0 29½ |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்கலாகாது.

உணவு விலைக் கட்டளை இல. என். ஈ. 62. — உப உணவுப் பொருட்கள் (மசூர்ப் பருப்பு.)

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

### நீக்கல் கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவை அச்சட்டத்தின் 3 (2) பிரிவுடன் சேர்த்து வாசிக்குமிடத்து, எனக்களிக்கப் பட்ட தத்துவங்களைக் கொண்டு உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), நுவரேலியா திஸ்ரிக்ட், சில்வெஸ்டர் ஜெஸ்டின் விஜேசேகர ஆகிய நான் இக்கட்டளையால் பின்வருவனவற்றை உடனடியாக நீக்கிவிடுகிறேன்—

1960 ம் ஆண்டின் பெப்ருவரி மாதம் 8 ம் திகதி வெளிவந்த 12,057 ம் இலக்க அரசாங்க அதிவிசேஷ வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட உப உணவு மசூர்ப் பருப்பு சம்பந்தப்பட்ட என். ஈ. 58 ம் இலக்க எனது உணவு விலைக் கட்டளை.

1960 ம் ஆண்டு மே மாதம் 2 ம் திகதி மு.ப. 9 மணிக்கு நுவரேலியா கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

எஸ். ஜே. விஜேசேகர,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
நுவரேலியா.

---

அரிசி

உணவு விலைக் கட்டளை இலக்கம் MT/7/60

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினலும் 3 (2) ம் பிரிவினலும் (உணவு) விலைக் கட்டுப்பாட்டதிகாரிக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு மாத்தறை மாவட்ட (உணவு) உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி, ஹெட்டிகே டொன் டியுடர் போதிதாஸ ஆகிய நான் இக்கட்டளையால்—

(i) 1959 ம் ஆண்டு ஜூன் மாதம் 26 ம் திகதி வெளிவந்த 11,790 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1959 ம் ஆண்டு ஜூன் மாதம் 22 ந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட MT/5/59 இலக்கமுள்ள எனது விலைக்கட்டளையை 1960 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 11 ந் திகதியிலிருந்து எடுத்து விடுகிறேன் ;

(ii) இதனோடிருக்கும் முதலாம் அட்டவணையில் 2 ம் பத்தியில் குறிக்கப்பட்டிருக்கும் விலை ஒரு நிகர அந்தர் (எல்லாவகை) அரிசிக்கு ஆகக்கூடிய மொத்த விலையாக 1960 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 11 ந் திகதியிலிருந்து அதே அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எல்லைகளுக்குள் நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். இவ்விலைக்குக் கூடுதலாக ஒருவரும் மொத்த விற்பனை செய்யக் கூடாது ;

(iii) இதனோடிருக்கும் இரண்டாம் அட்டவணையில் 2 ம் பத்தியில் குறிக்கப்பட்டிருக்கும் விலை ஒரு நிகர இருத்தல் (எல்லாவகை) அரிசிக்கு ஆகக்கூடிய சில்லறை விலையாக 1960 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 11 ந் திகதியிலிருந்து அதே அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எல்லைக்குள் நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். இவ்விலைக்குக் கூடுதலாக ஒருவரும் விற்பனை செய்யக் கூடாது ;

(iv) இக்கட்டளையின் நோக்கத்துக்காக :—

(அ) எத்தொகையான எவ்வகையான அரிசியும் திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது ஒரு நிகர அந்தருக்குக் கூடிய அரிசியை ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் ;

(ஆ) எத்தொகையான எவ்வகையான அரிசியும் ஒரு நிகர அந்தருக்குக் குறைவாக பாவிப்புக்கு அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும் ;

(v) ஒருவரும் அரிசியோடு வேறு எந்தப் பொருளும் கலந்து விற்றலாகாது ;

(vi) எவ்வகையான அரிசியும் விற்கப்படுமிடத்து அவ்வாறு விற்கப்படும் அரிசியைச் சுற்றிக்கொடுக்கும் பொருள் அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(vii) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்ட எல்லைகளுக்குள் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் அரிசி வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக்காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(viii) இக்கட்டளையின் நோக்கத்திற்காக "இருத்தல்" என்பது அவோர்டிபோஸ் எடுத்தலளவையின் பிரமாண இருத்தல் நிறையாகும்.

(ix) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்ட எல்லைகளுக்குள் மொத்தமாகவும் சில்லறையாகவும் அரிசி விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்கப்பட்ட அரிசியின் அளவு ;

(இ) விற்கப்பட்ட அரிசியின் தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது ;

1960 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 29 ந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மாத்தறைக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

எச். டீ. டி. போதிதாஸ,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மாத்தறை மாவட்டம்.

### முதலாம் அட்டவணை

| பத்தி 1<br>எல்லை | பத்தி 2<br>நிகர அந்தர் ஒன்றுக்கு ஆகக்கூடிய மொத்த விலை<br>ரூ. ச. |
|---|---|
| மாத்தறை நகர சபைஎல்லைப் பகுதி .. | 14 17 |
| மெடிஹ–கொடகம கிராமச் சபை எல்லைப் பகுதி .. | 14 24½ |
| தெய்வந்துறை தெற்கு கிராமத் தலைவர் பகுதி .. | 14 24½ |
| நாதுகல கிராமத் தலைவர் பகுதி .. | 14 24½ |
| கந்தறை மேற்கு கிராமத் தலைவர் பகுதி .. | 14 30 |
| கந்தறை கிழக்கு கிராமத் தலைவர் பகுதி .. | 14 31 |
| திஹகொட கிராமத் தலைவர் பகுதி .. | 14 31 |
| நாய்ம்பன கிராமத் தலைவர் பகுதி .. | 14 32 |
| கிரிந்தமகின் இஹல கிராமத் தலைவர் பகுதி .. | 14 33 |
| கறகொட உயன்கொட (1) கிராமத் தலைவர் பகுதி .. | 14 33 |
| கோட்டகொட கிராமத் தலைவர் பகுதி .. | 14 34 |
| கிரிந்தமகின் பஹல கிராமத் தலைவர் பகுதி .. | 14 34 |
| கறகொட உயன்கொட (2) கிராமத் தலைவர் பகுதி .. | 14 34 |
| பற்துவ கிராமத் தலைவர் பகுதி .. | 14 35 |
| திப்பொடுவாவ கிராமத் தலைவர் பகுதி.. | 14 37 |
| திக்வெல்லை கிராமத் தலைவர் பகுதி .. | 14 37 |
| அக்குறஸ்ஸ கிராமத் தலைவர் பகுதி .. | 14 37 |
| திக்வெல்லை முஸ்லிம் வீதி .. | 14 37 |
| திக்வெல்லை வடக்கு கிராமத் தலைவர் பகுதி .. | 14 38½ |
| மாறம்ப தெற்கு கிராமத் தலைவர் பகுதி .. | 14 39 |
| மாறம்ப வடக்கு கிராமத் தலைவர் பகுதி .. | 14 41 |
| ஹக்மன கிராமத் தலைவர் பகுதி .. | 14 41 |
| கம்புறுபிடிய கிராமத் தலைவர் பகுதி .. | 14 41 |
| கந்தபிட வளக்கட கிராமச் சபை எல்லை .. | 14 43 |
| பானதுகம கிராமத் தலைவர் பகுதி .. | 14 43 |
| மொறவக்க கிராமத் தலைவர் பகுதி .. | 14 57 |
| கொட்டப்பொள கிராமத் தலைவர் பகுதி .. | 14 62 |
| தெனியாய கிராமத் தலைவர் பகுதி .. | 14 69 |
| வெலிகாமம் நகரசபை எல்லைப் பகுதி .. | 14 00 |
| தெனிபிடிய கிராமத் தலைவர் பகுதி .. | 14 06 |
| வடகெதறமுள்ள முஸ்லிம் கிராமத் தலைவர் பகுதி .. | 14 03½ |
| வடகெதறமுள்ள சிங்கள கிராமத் தலைவர் பகுதி .. | 14 03½ |
| கடுகண்ண கிராமத் தலைவர் பகுதி .. | 14 17½ |
| உடுகாவ கிராமத் தலைவர் பகுதி .. | 14 16 |
| பொன்வத்த கிராமத் தலைவர் பகுதி .. | 14 06 |
| கம்புறு கமுவ கிராமத் தலைவர் பகுதி .. | 14 17½ |
| மிரிஸ்ஸ வடக்கு கிராமத் தலைவர் பகுதி .. | 14 10 |
| மிரிஸ்ஸ தெற்கு கிராமத் தலைவர் பகுதி .. | 14 10 |

## இரண்டாம் அட்டவணை

| பத்தி 1<br>எல்லைகள் | | பத்தி 2<br>நிகர இருத்தல் ஒன்றுக்கு ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| வெலிகாமம் நகரசபை எல்லைப் பகுதி .. | .. | 0 13 |
| மாத்தறை நகரசபை எல்லைப் பகுதி .. | .. | 0 13¼ |
| மெடிஹ-கொடகம கிராமச் சபை எல்லைப் பகுதி | .. | 0 13¼ |
| வெலிகாமம் கிராமச் சபை எல்லைப் பகுதி | .. | 0 13¼ |
| மாளிம்பொட கிராமச் சபை எல்லைப் பகுதி | .. | 0 13¼ |
| நாவிம்மன-மாகாவிட கிராமச் சங்க எல்லைப் பகுதி | .. | 0 13½ |
| தெய்வந்துறை பட்டின சபை எல்லைப் பகுதி | .. | 0 13½ |
| தெய்வந்துறை கிராமச் சபை எல்லைப் பகுதி | .. | 0 13½ |
| கெகனதுறை கிராமச் சபை எல்லைப் பகுதி | .. | 0 13½ |
| கொடபிடிய கிராமச் சபை எல்லைப் பகுதி | .. | 0 13½ |
| திஹகொட கிராமத் தலைவர் பிரிவு .. | .. | 0 13½ |
| பஹளவிடியள கிராமத் தலைவர் பிரிவு .. | .. | 0 13½ |
| கடிதுவ கிராமத் தலைவர் பிரிவு .. | .. | 0 13½ |
| நாய்ம்பன கிராமத் தலைவர் பிரிவு .. | .. | 0 13½ |
| பண்டத்தற கிராமத் தலைவர் பிரிவு | .. | 0 13½ |
| நாதுகள கிராமத் தலைவர் பிரிவு .. | .. | 0 13½ |
| அத்துடாவ கிராமத் தலைவர் பிரிவு .. | .. | 0 13½ |
| பாளட்டுவ கிராமத் தலைவர் பகுதி .. | .. | 0 13½ |
| அகுறஸ்ஸ கிராமச்சபை எல்லைப் பகுதி | .. | 0 13½ |
| திக்வெல்லை கிராமச் சபை எல்லைப் பகுதி | .. | 0 13¾ |
| கந்தபிட-வளகட கிராமச் சபை எல்லைப் பகுதி | .. | 0 13¾ |
| ஹக்மன கிராமச் சபை எல்லைப் பகுதி | .. | 0 13¾ |
| கறகொட-உயன்கொட (1) (2) ம் கிராமத் தலைவர் பிரிவு | | 0 13¾ |
| கம்புறுபிடிய கிராமச் சபை எல்லைப் பகுதி | .. | 0 13¾ |

| பகுதி 1<br>எல்லைகள் | | பகுதி 2<br>நிகர இருத்தல் ஒன்றுக்கு ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| யடியன கிராமத் தலைவர் பிரிவு .. | .. | 0 13¾ |
| மெதஉயன்கொட கிராமத் தலைவர் பிரிவு | .. | 0 13¾ |
| உடுவ கிழக்கு கிராமத் தலைவர் பிரிவு | .. | 0 13¾ |
| கல்பொட கிராமத் தலைவர் பிரிவு .. | .. | 0 13¾ |
| உடுவ மேற்கு கிராமத் தலைவர் பிரிவு .. | .. | 0 13¾ |
| கோமங்கொட கிராமத் தலைவர் பிரிவு.. | .. | 0 13¾ |
| அங்குன-பதுள்ள கிராமத் தலைவர் பிரிவு | .. | 0 13¾ |
| கெடியாப்பே கிராமத் தலைவர் பிரிவு | .. | 0 14 |
| இதனகம மேற்கு கிராமத் தலைவர் பகுதி | .. | 0 14 |
| மொறவக்க கிராமச் சபை எல்லைப் பகுதி | .. | 0 14 |
| மாவறன கிராமத் தலைவர் பிரிவு .. | .. | 0 14 |
| கொட்டப்பொள வடக்கு கிராமத் தலைவர் பிரிவு | .. | 0 14¼ |
| கொட்டப்பொள தெற்கு கிராமத் தலைவர் பிரிவு | .. | 0 14¼ |
| தெனியாய கிராமச் சபை எல்லைப் பகுதி | .. | 0 14¼ |
| பெறளபஞ்தற கிராமச் சபை எல்லைப் பகுதி | .. | 0 14½ |
| வியம்பளாகொட மேற்கு கிராமத் தலைவர் பிரிவு | .. | 0 14¾ |

**குறிப்பு.**—இவ்விலைகள் அரிசிவிற்பனை செய்ய வேண்டுமென குறிக்கப் பட்ட விலைகள் அல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக் குக் கூடுதலாக விற்பனை செய்யலாகாது.

(ii) ஒரு நிகர அந்தருக்குக் கூடிய அல்லது குறைந்த தொகையை மொத்த விலைக்கு விற்கும்பொழுது அதன் ஆகக் கூடிய விலையை மேலே குறித்த ஆகக் கூடிய மொத்த விலையின் பிரகாரம் அவற்றிற்குத் தக பிரித்துக் கணக்கிடப்படவேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது